# ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் - தொழிலாளர்களுக்கான ‘பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு’ குறித்த தகவல்கள்

(**Work health and safety information for workers**)

## தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்ளுமாறு என்னை பலவந்தப்படுத்த இயலுமா?

உங்களுடைய விருப்பத்திற்கு எதிராகத் தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்ளவோ, எவ்வொரு மருத்துவ சிகிச்சைச் செயல்பாட்டு முறையையும் மேற்கொள்ளவோ உங்களைப் பலவந்தப்படுத்த இயலாது.

இருப்பினும், சில தருணங்களில், அதியுயர் ஆபத்து உள்ள தொழில் ஒன்றில் பணி புரிவதற்காக தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்வதை உங்களுக்குத் தேவைப்படுத்தும் ‘பொது சுகாதார உத்தரவுகள்’ (public health orders) இருக்கக்கூடும். உங்களுடைய சுகாதார முகமையினால் அளிக்கப்படும் நடப்பு-நாள் வரைக்குமான அறிவுரைகளை அவ்வப்போது தெரிந்துவைத்துக் கொள்ளுங்கள்.

## பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சட்டங்களின் கீழ், ‘கோவிட்-19’-இற்கு எதிரான தடுப்பூசி மருந்தினை நான் இட்டுக்கொள்ள வேண்டும் என்று என்னுடைய முதலாளி எனக்குச் சொல்ல இயலுமா?

பெரும்பான்மையான தொழிலாளர்களுக்கு, தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்ளுமாறு பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சட்டங்களின் கீழ் உங்களுடைய முதலாளியால் வேண்ட இயலாது.

இருந்தாலும், குறிப்பாக நோய்த்தொற்றினை எதிர்கொள்ளும் ஆபத்து அதிகம் உள்ள தொழில்களில் நீங்கள் பணியாற்றிவந்தால், விதிவிலக்குகள் இருக்கலாம். தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்வதை உங்களுக்குத் தேவைப்படுத்தும் குறிப்பிட்ட சில ‘பொது சுகாதார உத்தரவுக’(public health orders)ளும் இருக்கக்கூடும்.

தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்ளுமாறு உங்களுடைய முதலாளி உங்களை வேண்டினால், அறிவார்ந்த ஒரு முடிவினை மேற்கொள்ள உங்களுக்கு உதவும் தகவல்களையும், ஏடுகள்/சாதனங்களையும் அவர் உங்களுக்கு அளிக்கவேண்டும். கரிசனங்கள் உங்களுக்கு இருந்தால் உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள். உதவிக்காக, உங்களுடைய உள்ளூர்ப் பகுதியிலுள்ள ‘பணியிட சுகாதாரம் மற்றும்

பாதுகாப்பு ஒழுங்குறுத்துனர்’ (work health and safety regulator), ’சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரதிநிதி’ (health and safety representative(HSR)) அல்லது தொழிலாளர் அமைப்புடன் தொடர்புகொள்ளுங்கள்.

உங்களுக்குள்ள பணியிட உரிமைகள் குறித்த மேலதிகத் தகவல்களைத் தெரிந்துகொள்ள, ‘பணியிட நியாய அரச-குறைகேட்பாளர்’(Fair Work Ombudsman)-உடன் பேசுங்கள்.

## பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சட்டங்களின் கீழ், ஒரு தொழிலாளர் என்ற முறையில் என்னுடைய கடமைகள் யாவை? நான் தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்ள வேண்டும் என்பதை இது குறிக்குமா?

ஒரு தொழிலாளர் என்ற முறையில், நியாயமான அளவிற்கு நீங்கள் உங்களை அவசியம் கவனித்துக்கொள்ள வேண்டும், மற்றும் வேலைத்தலத்திலுள்ள மற்றவர்களது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினைப் பாரதூரமான விதத்தில் பாதிக்கவல்ல எதையும் நீங்கள் செய்யக்கூடாது. நியாயமான அளவிற்கு உங்களால் இயலும் வரை உங்களுடைய முதலாளியிடமிருந்து வரும் நியாயமான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த அறிவுறுத்தல்களை நீங்கள் கட்டாயம் பின்பற்றவேண்டும்.

தடுப்பூசி மருந்தளிப்பினை உங்களுக்குத் தேவைப்படுத்தும் சட்டம் அல்லது பொது சுகாதார உத்தரவு ஒன்று நடைமுறையில் இருந்தால், அந்தத் தொழிலில் வேலை செய்ய, அல்லது வேலையைத் தொடர, தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்ள வேண்டிய தேவை உங்களுக்கு இருக்கலாம்.

## வேலைத்தலத்தில் தடுப்பூசி மருந்துகள் இட்டுக்கொள்வதைத் தேவைப்படுத்துவதற்கு முன்பாக என்னுடைய முதலாளி என்னுடன் பேச வேண்டியிருக்குமா?

ஆம். கட்டாயத் தடுப்பூசி மருந்தளிப்புக் கொள்கையை உங்களுடைய முதலாளி கருத்தில் கொள்கிறார் என்றால், எவ்வொரு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு முன்பாக அவர் உங்களுடனும், உங்களுக்கான ‘சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரதிநிதி’ எவரும் இருந்தால் அவருடனும் கட்டாயம் கலந்தாலோசிக்க வேண்டும். உங்களால் தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்ள இயலாததற்கான காரணம் ஒன்று இருந்தால், நீங்கள் அவருக்கு அதைத் தெரிவிக்கவேண்டும்.

## எனக்குத் தடுப்பூசி மருந்து இடப்பட்டுள்ளது. உடல்ரீதி விலகல் மற்றும் கைச் சுத்திகரிப்பு போன்ற மற்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நான் இப்போதும் மேற்கொள்ள வேண்டுமா?

ஆம். பாதுகாப்பான மற்றும் செயலூக்கம் மிக்க தடுப்பூசி மருந்தென்பது சமூகத்தினரைப் பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருப்பதன் ஒரு

அங்கம். ‘கோவிட்-19’-இன் பரவலைத் தடுப்பதற்குப் பின் வரும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவாருங்கள்:

- பொது சுகாதார அறிவுரைகளைப் பின்பற்றுங்கள்
- உங்களுக்கு உடல்நிலை சரியில்லாதபோது, உங்களுக்குக் ‘கோவிட்-19’ நோயறிகுறிகள் இருக்கும்போது, அல்லது சுகாதார அதிகாரிகளால் வீட்டிலேயே இருக்குமாறு உங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கும்போது வேலைக்குப் போகாதீர்கள்
- உடல்ரீதி விலகல் மற்றும் சுத்திகரிப்பு போன்ற ‘கோவிட்-19’-இற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவது உள்ளடங்க, பணியிடத்தில் பாதுகாப்பாகத் தொழில் புரிய உங்களால் நியாயமாக இயலக்கூடிய அனைத்தையும் செய்யுங்கள்
- அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்
- உங்களுடைய வேலையைப் பாதுகாப்பாக செய்வது எப்படி என்று உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், மற்றவர்களைக் கேளுங்கள்
- கையுறைகள் போன்ற சரீரப் பாதுகாப்பு சாதனங்க(personal protective equipment (PPE))ளைப் பயன்படுத்துவது எப்படி என்று உங்களுக்குப் பயிற்சியளித்து அறிவுறுத்தப்பட்டதோ அவ்வாறு அவற்றைப் பயன்படுத்துங்கள்.
- பாதுகாப்பு இல்லாத சூழ்நிலைகள் எதனையும் உங்களுடைய மேற்பார்வையாளர் அல்லது ‘சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரதிநிதி’க்குத் தெரியப்படுத்துங்கள்.

## மேலதிகத் தகவல்கள்

- சுகாதாரம் மற்றும் தடுப்பூசி மருந்துகள் குறித்த தகவல்கள் - ‘சுகாதார திணைக்களம்’ (Health and vaccines information - Department of Health)
- ‘பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு - ‘ஆஸ்திரேலியப் பணிப் பாதுகாப்பு’ (Work health and safety - Safe Work Australia)
- பணியிட உரிமைகள் - ‘பணியிட நியாய அரச-குறைகேட்பாளர்’ (Workplace rights - Fair Work Ombudsman)